மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். கோவை, கன்னியாகுமரி, மதுரை என்று 3 மாவட்டங்களையும் சேர்த்துச் சொன்னேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஓரளவிற்கு நெல் அதிகமாக, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, விளைகிற மாவட்டம். அந்த மாவட்டத்தின் 15 மைல் எல்லை ஓரங்களை அதாவது சித்தூர், ஆற்காட்டில் இருக்கும் 15 மைல் களைச் சுற்றி ஆற்காடும் இருக்கிறது. அந்த ஆற்காட்டுக்கும் இந்த உரிமங்களை வழங்குவதில் தகராறு செய்கிறார்கள் ஆந்திரா அருகே இருப்பதால். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆற்காட்டிற்கு உரிமங்களை வழங்குவதில் எந்தவிதத் தொல்லையும் இல்லாமல் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, முதலில் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட எல்லைகளை ஒட்டி 15 மைல் தூரப் பகுதியை, பெல்ட் ஏரியாவைத் தளர்த்தி, மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் உரிமங்களை வழங்க உத்தரவு போட்டிருக்கிறது.

## *Jobless Engineers*

*478 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether this Government have any scheme to utilise the services of jobless Engineers for irrigation and power schemes; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: May I know from the Hon. Minister whether the statement that has been placed here consists of the persons employed during the past several years or the persons who are now in employment or whether the Hon. Minister will be able to give us the number of persons who are employed as per my question during the last one or two years, especially because of the unemployment problem, whether this was announced by the Chief Minister in the year 1969 during the month of November—340 engineers—160 for irrigation schemes and 180 for power schemes—would be appointed for the 10 divisions? And if so, the programme divisionwar and the appointments for these divisions?

@ 336-337-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

*1971 சூலை 29]*

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The appointment was in pursuance of G.O. No. 1546, dated 16th October 1970. The Government of Tamil Nadu in G.O. No. 1546, dated 16th October 1970 have sanctioned a new scheme for the training of unemployed technical personnel. Under the above scheme 60 Degree holders, 1,000 Diploma holders and 800 Craftsmen would be entertained as apprentices in various departments of the Government for a period of two years. Under the above Scheme, the Tamil Nadu Electricity Board will be taking 495 apprentices as detailed below :

Graduates—145.

Diploma holders—150.

Craftsmen trainees—200.

This is in pursuance of the orders issued in the year 1970 and that is to tide over the unemployment problem.

DR. H. V. HANDE : How far has the scheme been implemented? Out of these persons how many have actually been appointed during the one year under the various Heads?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதைப்போல் நியமிக்கப்பட்ட ஜாப்லெஸ் என்ஜினியர்ஸ், டிப்ளமா ஹோல்டர்ஸ் வேலைக்குச் சேர்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

## வட ஆற்காடு மாவட்டத்துக்குத் தனி பொதுப்பணிக்கோட்டம்

* 479 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டத்தில் ஏரி, குளங்களைத் தோண்டுவதற்குத் தனி பொதுப்பணிப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

## அழகாபுரி அருகில் குடவனாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

* 480 வினா—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில், வேடசந்தூர் வட்டத்தைச் சேர்ந்த அழகாபுரி அருகில் குடவனாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சுமாராக ரூ. 180 லட்சம்.